




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 328 | 4 Pages | 23.6.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 328 | 4 பக்கங்கள் | 23.6.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**

**கொல்லாமை சூழும் நெறி**

**விளக்கம்:**

**நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.**

## பிரதமர் மோடி முழக்கமிடுவதில் தேர்ச்சி பெற்றுள்ளார்; தீர்வு காண்பதில் அல்ல ராகுல் காந்தி



புதுடெல்லி, ஜூன் 23

பிரதமர் நரேந்திர மோடி முழக்கமிடும் கலையில் தேர்ச்சி பெற்றுள்ளார், ஆனால் அவர் எந்த தீர்வுகளையும் வழங்கவில்லை என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"உள்நாட்டு தயாரிப்புகளை ஊக்குவிக்கும் 'மேக் இன் இந்தியா' திட்டம், இந்தியாவில் அதிக அளவில் தொழிற்சாலைகள் பெருகும் என்ற வாக்குறுதியை அளித்தது. ஆனால், இன்று நாட்டில் உற்பத்தி ஏன் குறைந்துள்ளது? வேலையின்மை ஏன் அதிகரித்துள்ளது? சீனாவிலிருந்து இறக்குமதிகள் ஏன் இரட்டிப்பாகியுள்ளன?

பிரதமர் மோடி முழக்கமிடும் கலையில் தேர்ச்சி பெற்றுள்ளார், ஆனால், தீர்வு காண்பதில் அல்ல. பொருளாதார ரீதியில் 2014 முதல் நமது உற்பத்தி 14 சதவீதமாக குறைந்துள்ளது. அரசு இறக்குமதியில்தான் ஆர்வம் காட்டுகிறது. உள்நாட்டு நிறுவனங்களை பெருக்குவதில் அல்ல. இறுக்குமதி அதிகரிப்பால் சீனா லாபம் அடைகிறது.

நேர்மையான சீர்திருத்தங்கள் மூலமும், நிதி உதவி அளிப்பதன் மூலமும் லட்சக்கணக்கான உற்பத்தியாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் அடிப்படை மாற்றமே இந்தியாவுக்குத் தேவை. மற்றவர்களுக்கு ஒரு சந்தையாக இருப்பதை நாம் நிறுத்த வேண்டும்.

உடல் உழைப்பை நாம் மதிக்கத் தொடங்கும் வரை, தெருக்களில் நின்று மணிக்கணக்காக வேலையும், வியாபாரமும் செய்து வரும் மனிதர்களை நாம் மதிக்க மாட்டோம். மேலும் இதன் மையத்தில் 'சாதி' என்ற கருத்து உள்ளது. இதை நாம் வெளிப்படையாக கூற வேண்டும். இந்திய சமூகம் எவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கிறது, இந்திய சமூகம் எவ்வாறு மரியாதையை பகிர்ந்து கொள்கிறது என்பதை நாம் சரியாக புரிந்து வேண்டும்."

இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

## புதுவையில் மதுபானங்களின் விலை உயர்வு



புதுச்சேரி, ஜூன் 23

புதுவை அரசின்வருவாயை பெருக்க கலால்வரி, நில வழிகாட்டி மதிப்பு உள்ளிட்ட பல்வேறு வரிகளை உயர்த்தியுள்ளது.கலால்வரி உயர்வால் புதுவையில் மதுபானங்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு ஏற்கனவே கொள்முதல் செய்தமதுபானங்களுக்குபொருந்தாது, அவற்றை பழைய விலைக்கே விற்க கலால்துறை உத்தரவிட்டிருந்தது. இதனால் விலை உயர்வுக்கு பின் 10 நாட்களாக பழைய விலையில் மதுபானங்கள் விற்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் இன்று முதல் உயர்த்தப்பட்ட புதிய விலையில் மதுபானங்கள் விற்கப்படுகிறது. மிக குறைந்த விலை கொண்ட ரூ.60 விலை கொண்ட குவார்ட்டர் மது ரூ.72 முதல் ரூ.74 வரை விற்கப்படுகிறது. அதிகமாக விற்பனையாகும் பிராண்டட் மது குவார்ட்டர் ரூ.120ல் உயர்த்தப்பட்டு, ரூ.147க்குவிற்கப்படுகிறது.இதுபோலஅனைத்துமதுபானங்களின்விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இது மது பிரியர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஏர் இந்தியா நிறுவனத்தின் 3 அதிகாரிகளை பணியில் இருந்து நீக்க மத்திய அரசு உத்தரவு




டெல்லி, ஜூன் 23

குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்துகடந்த12ம்தேதிஇங்கிலாந்து புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. புறப்பட்டு சில நிமிடங்களிலேயே அருகில் இருந்த மருத்துவக்கல்லூரி விடுதி மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உள்பட மொத்தம் 275 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் விபத்து தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில்,ஏர்இந்தியாநிறுவனத்தில்பணியாற்றும்3மூத்தஅதிகாரிகளை பணியில் இருந்து நீக்க ஏர் இந்தியாவுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாகமத்தியஅரசின்சிவில்விமானபோக்குவரத்துஇயக்குநரகம் வெளியிட்ட உத்தரவில், அனுமதிக்கப்பட்ட பணி நேரத்தை தாண்டி விமானத்தை விமானிகள் இயக்க அனுமதித்தல், விமான பணியாளர்களுக்கு வேலையில் போதிய அவகாசம் வழங்காதது, பணிநேரத்தை அதிகரித்தல், அடிக்கடி பணி வழங்குதல் உள்பட பல்வேறு விதி மீறல்கள் தொடர்பாக 3 மூத்த அதிகாரிகளை பணியில் இருந்து நீக்கி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏர் இந்தியாவுக்கு மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## பஞ்சாப்: பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்த நபர் கைது 6 கைத்துப்பாக்கிகள் பறிமுதல்

சண்டிகர், ஜூன் 23

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பை பயங்கரவாத இயக்கமாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த இயக்கத்தின் கிளை அமைப்பான அனைத்துலகபாபர்கால்சாஎன்றஅமைப்பும்பயங்கரவாதஇயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு பஞ்சாப்பில் மறைமுகமாவும், கனடா போன்ற நாட்டிலும் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், பஞ்சாப்பின்அமர்தசரஸ்பகுதியை சேர்ந்த நபருக்கும் அனைத்துலக பாபர் கால்சா பயங்கரவாத அமைப்பிற்கும் தொடர்பு இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் அமர்தசரசில் சோதனை நடத்திய போலீசார், பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்த அன்ஹர் சிங் என்ற நபரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 6 கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

# எல்லாரும் முன்னேறுவது சிலருக்கு பிடிக்கவில்லை: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சு

சென்னை ஜூன் 23

ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை பொதுமக்களின் பார்வைக்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டிய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பாராட்டு விழா நடைபெற்றது. இந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலினகூறியதாவது:

இன்று எனக்கு உணர்ச்சிப்பூர்வமான நாள். இந்த விழாவுக்காக மட்டுமல்ல, இந்த இடத்துக்காகவும்உணர்ச்சிவசப்படுகிறேன். வள்ளுவருக்கு முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி சூட்டிய புகழ் மாலைகளில் மிக முக்கியமானது 1974ல் அவர் அடிக்கல் நாட்டிய இந்த வள்ளுவர் கோட்டம். திருவள்ளுவர்சிலையும், திருவாரூர் தேரும் அமைந்துள்ள இந்த கோட்டம் கலைஞரின் கனவு படைப்பு. இந்த கலை கருவூலத்தைத்தான் நாம் தற்போது 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்திருக்கிறோம்.



பாராட்டுக்காக நான் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கவில்லை. உங்கள் அன்புக்காகத்தான் பங்கேற்றிருக்கிறேன். நான் எப்போதும் உங்களில் ஒருவன்; மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். அரசியலுக்காக, தேர்தலுக்காக இதை செய்யவில்லை; உள்ளார்ந்து செய்கிறேன். உங்கள் கோரிக்கைகளுக்கு நீங்களே தீர்வு காண உள்ளாட்சி அமைப்பில் பொறுப்பு வழங்கப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 650 பேர், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2,984 பேர் நியமிக்கப்படுவர். மாவட்ட வாரியாக ஜூலை 1 முதல் விண்ணப்பம் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.

மாற்றுத்திறனாளிகள் மிகப்பெரிய அளவில் முன்னேறி வருகிறார்கள். உயர்ந்த இடங்களை அடைந்திருக்கிறார்கள். சமூக தடைகளை உடைத்து முன்னேறி வருகின்றனர். முயற்சி செய்தால் எதுவும் முடியும் என்பதை உண்மையிலேயே நிரூபித்து வருபவர்கள் மாற்றுத்திறனாளிகள்தான். உங்களுக்கு நான் இருக்கிறேன்; இந்த அரசு இருக்கிறது என நம்பிக்கையோடு செயல்படுங்கள். உங்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது எனது கடமை. இது எல்லாருக்குமான ஆட்சி. ஆனால் எல்லாரும் முன்னேறுவது சிலருக்கு பிடிக்கவில்லை. எல்லா சமூகத்தினரும் முன்னேற கூடாது என வகுப்புவாத சக்திகள் நினைக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## செல்போனில் பேசிக் கொண்டே பஸ்சை ஓட்டிய ஓட்டுநர் பணியிடை நீக்கம்



திருப்பூர் (Tiruppur) மாவட்டத்தில், செல்போனில் ஹெட்செட் பயன்படுத்தி இரு கைகளையும் ஸ்டீயரிங்கில் இருந்து எடுத்து விட்டு பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் தாமரைக்கண்ணன் (Driver Thamaraikannan) மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அஜாக்கிரதையான செயல் பயணிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஒரு பயணி எடுத்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதையடுத்து பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய போக்குவரத்துக் கழகம் (Tamilnadu Transport Corporation), அவர் மீது நடவடிக்கை எடுத்து பணியிடை நீக்கம் செய்தது. மக்கள் பாதுகாப்பை மீறிய இந்த செயல் தற்போது விவாதத்திற்குரியதாக உள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் நடந்த பரபரப்பான சம்பவம் ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி, அதிகாரிகளின்கவனத்தைஈர்த்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் குன்னத்தூரிலிருந்து பெருமாநல்லூர்மற்றும்புதியபேருந்து நிலையம் வழியாக திருப்பூர் பழைய பேருந்து நிலையம் செல்லும் 45பி எண் கொண்ட அரசுப் பேருந்தை, தாமரைக்கண்ணன் (45) என்ற ஓட்டுநர் இயக்கிக் கொண்டிருந்தார்.

இரு கைகளையும் ஸ்டீயரிங்கில் இருந்து எடுத்த அலட்சியம்பேருந்தை ஓட்டும் நேரத்தில் அவர் செல்போனில் ஹெட்செட் அணிந்து, இரு கைகளையும் ஸ்டீயரிங்கில் இருந்து எடுத்து வைத்து, அஜாக்கிரதையாக செல்பேசியது பயணிகளை அதிர்ச்சியடைய வைத்தது. இந்த குற்றச்சாட்டு தொடர்பான வீடியோவொன்று பஸ்சில் பயணித்த பயணியால் எடுக்கப்பட்டு சமூக வலைதளங்களில் பதிவிடப்பட்டதைத் தொடர்ந்து, அது தீவிரமாக பகிரப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக பொது மக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். பொதுப் போக்குவரத்தில் பயணிகள்உயிருக்குஆபத்தாகஇருக்கக்கூடிய இந்தசெயல்மீதுஅதிகாரிகள்விரைந்து நடவடிக்கை எடுத்தனர். விசாரணையை மேற்கொண்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருப்பூர் மண்டல அலுவலகம் சார்பில் அந்த ஓட்டுநர் தாமரைக்கண்ணன் மீது நடவடிக்கை எடுத்து, பணியிடை நீக்கம் செய்தது. இந்தச் சம்பவம், அரசு போக்குவரத்தில் பயணிக்கும் மக்களின் பாதுகாப்பு மீதான கவனத்தை மீண்டும் ஒருமுறை அதிகரிக்கச் செய்துள்ளது.

செல்போனில் பேசிக்கொண்டே வாகனம், குறிப்பாக பொதுப் போக்குவரத்து போன்ற பேருந்து போன்றவற்றை இயக்குவது என்பது மிகவும் ஆபத்தான செயலாகும். ஓட்டுநர் கவனச்சிதறலுக்கு உள்ளாகி, தடுப்புச்சுவரோ, மற்ற வாகனங்களோ, மனிதர்களோ மீது மோதும் அபாயம் அதிகமாக இருக்கிறது. அவசர நிலைமைக்கு சீரான எதிர்வினை அளிக்க முடியாமல் பெரும் விபத்துகள் நிகழ வாய்ப்பு உண்டு.

குறிப்பாக, இரு கைகளும் ஸ்டீயரிங்கில் இல்லாமல் இருந்தால், கட்டுப்பாட்டை இழந்து பல உயிரிழப்புகள் ஏற்படலாம். அந்த ஓட்டுநரின் அலட்சியம் பல பயணிகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது. அதனால், செல்போனில் பேசிக் கொண்டே வாகனம் ஓட்டுவதை கட்டுப்படுத்தும் விதிமுறைகள் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## JBS குழுமம் சார்பில் துபாயில் அல் மம்சாரில் உள்ள செஞ்சுரி மாலில் வணிக மேலாண்மை புதிய கிளையைத் திறக்கப்பட்டது : தென்னிந்திய நடிகை ஷம்னா காசிம் (பூர்ணா) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வணிக நிறுவனத்தை திறந்து வைத்தார்

துபாய், ஜூன் 23

வணிக அமைப்பு சேவைகளில் 25 ஆண்டுகால புகழ்பெற்ற JBS குழுமம் சார்பில் துபாயில் அல் மம்சாரில் உள்ள செஞ்சுரி மாலில் வணிக மேலாண்மை புதிய கிளையைத் திறக்கப்பட்டது

JBS குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ஷானித் ஆசிஃபாலியின் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில், தென்னிந்திய நடிகை ஷம்னா காசிம் (பூர்ணா) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய வணிக நிறுவனத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்




இந்த நிகழ்வில் அகமது பெட் வாவி, அப்துல் அஜீஸ், சுல்பிகர் அலி, ராகுல் பாப்பி மற்றும் முஹம்மது சாதிக் உள்ளிட்ட தொழிலதிபர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்

புதிதாக திறக்கப்பட்ட வணிக மேலாண்மைஅலுவலகத்தில், துபாய் பொருளாதாரத் துறை சேவை, குடிவரவு சேவை, எமிரேட்ஸ் ஐடி தட்டச்சு சேவை, துபாய் நகராட்சி ஆன்லைன் சேவை உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

புதிய கிளை முழு அளவிலான அரசு மற்றும் அரசு சாரா ஆவண அனுமதி சேவைகளை வழங்கும் என்று JBS குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ஷானித் ஆசிஃபாலி தெரிவித்துள்ளார்

விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு பல ஆண்டுகளாக அவர்களின் தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் ஆதரவிற்காக மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

## தூத்துக்குடியில் 11.5 கிலோ கஞ்சா, கார் பறிமுதல்: 3 பேர் கைது



தூத்துக்குடி ஜூன் 23

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் உத்தரவின்படி, தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன் தலைமையிலான தனிப்படை போலீசார் மற்றும் தாளமுத்துநகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அருளப்பன், சப்இன்ஸ்பெக்டர் முகிலரசன் உள்பட காவல்துறையினர் இன்று தாளமுத்துநகர்காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோமஸ்புரம் சேதுபாதை ரோடு சந்திப்பு அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக சந்தேகப்படும்படி வந்த ஒரு காரை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அதில் அவர்கள் திருநெல்வேலி ராஜவல்லிபுரத்தைச் சேர்ந்த மந்திரமூர்த்தி மகன் ஜெபராஜ் (28),

தூத்துக்குடிதாளமுத்துநகர்பகுதியைச்சேர்ந்த காளிராஜன் மகன் கார்த்திக்ராஜா(24) மற்றும் தூத்துக்குடியைச் சேர்ந்த இளஞ்சிறார் ஒருவர் என்பதும், அவர்கள் விற்பனைக்காக காரில் கஞ்சா வைத்திருந்ததும் தெரியவந்தது. உடனடியாக மேற்சொன்ன போலீசார் ஜெபராஜ், கார்த்திக்ராஜா ஆகிய இருவரை கைது செய்து, இளஞ்சிறாரை கையகப்படுத்தியதோடு அவர்களிடமிருந்த மொத்தம் 11 கிலோ 500 கிராம் கஞ்சா மற்றும் ஒரு கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து தாளமுத்துநகர் காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருநெல்வேலியில் காவலர்களுக்கான இலவச மருத்துவ முகாம்

திருநெல்வேலி ஜூன் 23

திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் வைத்து மாவட்ட காவல் துறை மற்றும் தனியார் மருத்துவமனை இணைந்து காவலர்கள், ஊர்க்காவல் படையினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவின்படி, திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை காவலர்கள், ஊர்க் காவல் படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் உடல் பரிசோதனை, ரத்த சர்க்கரை அளவு, கண்பார்வை பரிசோதனை, பல் மருத்துவ ஆலோசனை, ரத்த அழுத்த பரிசோதனை, எலும்பு தாது அடர்த்தி, ஹீமோகுளோபின் அளவு, ஆக்சிஜன் அளவு, இதய பரிசோதனை, வெரிகோஸ் மற்றும் சிறுநீரக கல்லடைப்பு போன்ற பரிசோதனைகள் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமில் காவலர்கள் மற்றும் ஊர்க்காவல் படையினர் ஆகியோர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.






# ஸ்ரீவில்லிபுத்தூரில் மூன்று வருடங்களாக வற்றாத குளங்கள்



ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 23

ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்த மூன்று வருடங்களாக பருவ நிலைகள் மாறினாலும் தொடர்ச்சியாக குளங்கள் மற்றும் கண்மாய்கள் வற்றாமல் உள்ளது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பருவநிலை மாற்றங்கள் காரணமாக கொளுத்தும் வெயில், கடுமையான மழை, கடும் குளிர் என காலநிலை மாறி மாறி வருகிறது.

கோடை காலத்தில் மழையும் மழைக்காலத்தில் வெயிலும் கொளுத்துகிறது. இந்த நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் முன்னதாகவே மழை பெய்தாலும் இரண்டு, மூன்று மாதங்கள் மழை தள்ளி பெய்தாலும் கண்மாய்கள் மற்றும் குளங்களில் கடந்த மூன்று வருடகாலமாக தண்ணீர் வற்றாமல் இருக்கிறது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் நகரை சேர்ந்த குட்டி என்பவர் கூறும்போது, பல ஆண்டுகளாக கோடை காலங்களில் குளங்கள் முழுமையாக வறண்டு போய் இருந்த காலம் உண்டு. ஆனால் தொடர்ச்சியாக மூன்றாண்டுகளாக கொளுத்தும் கோடை காலத்திலும் தண்ணீர் வற்றாமல் உள்ளதால் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்திய நாத சுவாமி கோவிலில் பழைய மற்றும் புதிய குளங்கள், விருதுநகர் மாவட்டத்திலேயே மிகப்பெரிய கண்மாயான ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியகுளம் கண்மாய், ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை சீனிவாச பெருமாள் சன்னதி கோயில் குளம், திருவில்லிபுத்தூர் திரு முக்குளம் ஆகியவை வற்றாமல் காட்சியளிக்கிறது.

இதிலும் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி கோவிலின் புதிய குளம் மற்றும் பழைய குளம் முழுமையான கொள்ளளவுடன் உள்ளது.

இதனால் பெரியகுளம் கண்மாயை நம்பி விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதேபோல் தொடர்ச்சியாக தண்ணீர் வற்றாமல் தேங்கி இருப்பதால் நிலத்தடி நீரும் உயரம் வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்களும்மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்று தெரிவித்தார்.

# கோவை அருகே வீட்டை சேதப்படுத்திய காட்டு யானை



கோவை, ஜூன் 23

கோவை அருகே வீட்டை காட்டு யானை சேதப்படுத்தியதால், பரபரப்பு ஏற்பட்டது. கோவை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய வனப் பகுதிகளில், காட்டு யானை உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன.

வனப்பகுதியில் இருந்து வெளியேறும் காட்டு யானைகள் அடிக்கடி உணவு மற்றும் தண்ணீர்தேடி, அருகில் உள்ள கிராமங்களுக்குள் நுழைவது வழக்கம்.

இதனிடையே கடந்த சில நாட்களாக கோவை நரசீபுரம் பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நரசீபுரம் பகுதிக்குள் ஒற்றை ஆண் காட்டு யானை நேற்றிரவு நுழைந்துள்ளது. அப்பகுதியில் சுற்றித்திரிந்த அந்த யானை, இச்சிக்குழி அருகில் உள்ள நாகர்கோவில் தோட்டத்திற்குள் புகுந்தது. பின்னர் அங்கு விவசாயம் செய்து வரும் கார்த்திக் என்பவரின் வீட்டை காட்டு யானை சேதப்படுத்தியது.

இதில் வீட்டின் முன் பக்க சுவரின் ஒரு பகுதி உடைந்து விழுந்தது. மேலும் அங்கு நிறுத்தப்பட்டு இருந்த கார் மற்றும் வீட்டின் முன்பு இருந்த பொருட்களையும் அந்த யானை சேதப்படுத்தியுள்ளது.

இதைப்பார்த்த அச்சம் அடைந்த வீட்டில் இருந்தவர்கள், வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். இதன் பேரில் விரைந்து சென்ற வனத்துறையினர், காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

தொடர்ச்சியாக காட்டு யானை குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து சேதங்களை ஏற்படுத்தி வருவதாகவும், காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைவதைதடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆங்கிலம் அவமானம்' என்ற உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சுக்கு இபிஎஸ் ஆதரவு



கோவை , ஜூன் 23

ஆங்கிலம் அவமானம்' என்ற உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சுக்கு இபிஎஸ் ஆதரவு தெரிவித்துள்ளார். தாய்மொழி என்பது மிக மிக முக்கியம் என்றுதான் அமித்ஷா கூறியுள்ளதாக எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். விரும்பும் தெய்வங்களை வழிபடுவது ஜனநாயக உரிமை என்று பாஜக முருக பக்தர்கள் மாநாடு குறித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கருத்து தெரிவித்தார்.

# கோயம்பேடு மார்க்கெட்டில் சுற்றித்திரிந்த மாடுகளை பிடித்து 60 ஆயிரம் அபராதம் விதிப்பு



அண்ணாநகர், ஜூன் 23

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுகளில் ஏராளமான மாடுகள் உலாவருவதால் வியாபாரிகள், பொதுமக்கள் கடும் அச்சம் அடைந்தனர். திடீரென வேகமாக மாடுகள் ஓடும்போது பொதுமக்கள் மீது மோதி காயம் அடைந்து வந்தனர். இதனால் அச்சுறுத்தலாக உள்ள மாடுகளை பிடிக்கவேண்டும் என்று பல தரப்பில் இருந்தும் கோரிக்கை எழுந்தது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் வியாபாரிகள் புகார் கொடுத்து மார்க்கெட்டில் சுற்றிவரும் மாடுகளை பிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அத்துடன் அங்காடி நிர்வாக முதன்மை அலுவலர் இந்துமதியை சந்தித்து புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்து அங்காடி நிர்வாக முதன்மை அலுவலர் இந்துமதி நேற்று மார்க்கெட்டில் ஆய்வு செய்தபோது பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றித்திரிந்த மாடுகளை பிடிக்க உத்தரவிட்டார். இதையடுத்து அங்காடி நிர்வாக ஊழியர்கள் 26 பேர் சென்று மார்க்கெட்டில் சுற்றித்திரிந்த மாடுகளை பிடித்து மாட்டின் உரிமையாளர்களை வர வைத்து பேசினர். பின்னர் அவர்களிடம் பேசி எச்சரிக்கை விடுத்ததுடன் 60 ஆயிரம் அபராதம் விதித்து மாடுகளை உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். ''மாடுகள் மார்க்கெட் வளாகத்திற்குள் வராதபடி வீட்டில் கட்டிப்போட்டு பராமரிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனர்.

# மெரினா சர்வீஸ் சாலையில் காரில் இளம்பெண்களுடன் சாகசத்தில் ஈடுபட்ட தம்பதி: சமூக வலைதளங்களில் வீடியோ வைரல்



சென்னை, ஜூன் 23

மெரினா சர்வீஸ் சாலையில் வழக்கம் போல் நேற்று காலை பொதுமக்கள் நடைபயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது கார் ஒன்று மின்னல் வேகத்தில் சீறி பாய்ந்தது. இதை பார்த்து சாலையில் நடைபயிற்சியில் ஈடுபட்ட பொதுமக்கள் அச்சத்தில் மணல்பரப்புக்கு ஓட்டம் பிடித்தனர். அந்த வழியாக வந்த ஆயுதப்படை காவலர் ஒருவர் இதை பார்த்து, அந்த காரை தடுத்த நிறுத்தும் வகையில் காரின் முன்பு தனது பைக்கை நிறுத்தி காரை ஓட்டிய நபரை பிடிக்க முயன்றார்.

ஆனால் காரை ஓட்டிய வாலிபர் காவலரை கண்டதும் வாகனத்தை பின்பக்கமாக வேகமாக இயக்கி பிறகு மோதுவது போல் அதிவேகமாக காமராஜர் சாலையை நோக்கி சென்றார். பிறகு மீண்டும் காமராஜர் சாலையில் இருந்து மெரினா சர்வீஸ் சாலையில் மின்னல் வேகத்தில் வந்தார். அப்போது காவலர் தடுப்புகளை போட்டு காரை தடுக்க முன்றார். ஆனால் கார் மின்னல் வேகத்தில் சர்வீஸ் சாலை வழியாக சென்றுவிட்டது. வாலிபரின் சாகச வீடியோ மெரினா கடற்கரையில் நடைபயிற்சியில் ஈடுபட்ட பொதுமக்களில் சிலர் தங்களது செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவேற்றினர். இந்த வீடியோ தற்போது வைரலாக பரவி வருகிறது.

பின்னர் சம்பவம் குறித்து அண்ணாசதுக்கம் போக்குவரத்து போலீசார் கார் பதிவு எண்ணை வைத்து விசாரணை நடத்திய போது மயிலாப்பூரை சேர்ந்த அபிஷேக் மற்றும் அவரது மனைவி நந்தினி என தெரியவந்தது. இவர்களை போலீசார் அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் கடற்கரைக்கு தனது மனைவியுடன் வந்தபோது, காரை விளையாட்டாக வேகமாக இயக்கியதாகவும், அப்போது காவலர் காரை தடுத்து நிறுத்தியதால், பதற்றமடைந்து என்ன செய்வது என்று தெரியாமல் அதிவேகத்தில் காரை இயக்கி அங்கிருந்து தப்பி வந்ததாக தெரியவந்துள்ளது. இருந்தாலும் போலீசார் தம்பதியிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓடும் பஸ்சில் இளம்பெண் முன் ஆபாச போஸ்: வாலிபர் கைது



திருவனந்தபுரம், ஜூன் 23

திருச்சூர் அருகே ஓடும் பஸ்சில் வைத்து இளம்பெண் முன் ஆபாச போஸ் கொடுத்த வாலிபரை போலீசார் கைது செய்தனர். இவர் ஏற்கனவே இதேபோன்ற புகாரின் பேரில் கைதாகி சிறை சென்றவர் என்பது தெரியவந்தது. கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்த 28 வயது இளம்பெண் சம்பவத்தன்று மலப்புரத்தில் இருந்து திருச்சூருக்கு கேரள அரசு பஸ்சில் பயணம் செய்தார். அப்போது அவருக்கு அருகே அமர்ந்திருந்த ஒரு வாலிபர் அந்த இளம்பெண் முன் ஆபாசமாக போஸ் கொடுத்தார்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த இளம்பெண் உடனே இதுகுறித்து திருச்சூர் கிழக்கு போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து நடத்திய விசாரணையில் ஆபாச போஸ் கொடுத்தது கோழிக்கோட்டை சேர்ந்தநவாஸ் (33) என்பது என தெரியவந்தது. இதைத் தொடர்ந்து போலீசார் அவரை தேடி கண்டுபிடித்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில் நவாசிடம் விசாரணை நடத்தியபோது, அவர் ஏற்கனவே கடந்த இரு வருடங்களுக்கு முன்பும் இதேபோல ஓடும் பஸ்சில் பெண் பயணிகள் முன் ஆபாசமாக போஸ் கொடுத்ததாக கூறப்பட்ட புகாரின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# விழுப்புரம் அருகே தென்பெண்ணை ஆற்றங்கரையில் பல்லவர் கால சிற்பம் கண்டுபிடிப்பு: 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது



விழுப்புரம், ஜூன் 23

விழுப்புரம் அருகே தென்பெண்ணை ஆற்றங்கரையில் 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்த பல்லவர் கால சிற்பத்தை வரலாற்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். விழுப்புரம் அருகே உள்ள அத்தியூர் திருவாதி கிராம நிர்வாக அலுவலர் குபேரன் அளித்தத் தகவலின் பேரில் விழுப்புரத்தைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் செங்குட்டுவன் கள ஆய்வில் ஈடுபட்டார். அப்போது பல்லவர் காலத்தைச் சேர்ந்த மூத்த தேவி சிற்பம் கண்டறியப் பட்டது.

இதுகுறித்து ஆய்வாளர் செங்குட்டுவன் கூறியதாவது: அத்தியூர் திருவாதி கிராமத்தில் தென்பெண்ணை ஆற்றின் வடக்குக் கரையில் சிறிய கோயில் அமைத்து அம்மன் என வழிபட்டு வருகின்றனர். இந்த பகுதியில் தான் இந்த சிற்பம் கிடைத்தது.

இந்தச் சிற்பம் வடமொழியில் ஜேஷ்டா தேவி என்று அழைக்கப்படும் மூத்ததேவி சிற்பம் ஆகும். பல்லவர் காலத்தைச் (கி.பி.78ம் நூற்றாண்டு) சேர்ந்தது. 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.

ஜடாபாரம் எனப்படும் உச்சிக் கொண்டையுடன் கூடிய தலை அலங்காரத்துடன் மூத்த தேவி சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. காதணிகள் கழுத்தணி, கனத்த மார்புகள், சரிந்த வயிற்றுடன் அழகாக காட்சியளிக்கிறாள். இடுப்பு முதல் கணுக்கால் வரை இடை ஆடை காட்டப்பட்டுள்ளது. மார்பு கச்சை காட்டப்படவில்லை. வலது கரம் தாமரை மொட்டினை ஏந்தியுள்ளது. இடது கரம் செல்வக் குடத்தின் மீது வைத்த நிலையில் காணப்படுகிறது. இரண்டு கால்களையும் அகட்டி தொங்க விட்ட நிலையில் பத்திராசனத்தில் அமர்ந்து இருக்கிறாள்.

மூத்த தேவியின் இருபக்கங்களிலும் அவளது மகன் மாந்தன் மகள் மாந்தி ஆகியோர் குழந்தை வடிவில் காட்டப்பட்டுள்ளனர். பொதுவாக மூத்த தேவி சிற்பங்களில் அவளது கொடியான காக்கைக் கொடி ஓரிடத்தில் மட்டுமே காட்டப்பட்டிருக்கும். ஆனால் இந்தச் சிற்பத்தில் வலது, இடது என இரண்டு பக்கங்களிலும் காக்கைக் கொடி காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கனவே பல்வேறு பகுதிகளில் மூத்ததேவி சிற்பங்கள் கண்டறியப் பட்டுள்ளன. அந்த வகையில் அத்தியூர் திருவாதி மூத்த தேவி சிற்பம் பல்லவர் கலை வரலாற்றுக்குப் புதிய வரவாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# குடிநீர் விநியோக பகுதிகளை மாற்றியமைக்கும் பணிகளை தொடங்கியது சென்னை குடிநீர் வாரியம்




சென்னை, ஜூன் 23

சென்னையில் பீக்ஹவரில் தண்ணீர் லாரிகளுக்கு தடை விதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. சென்னை அடுத்த பெரம்பூரில் பள்ளி சென்ற 10 வயது சிறுமி கனரக லாரி ஏறி தாய் கண் முன்னே உயிரிழந்தார். இதனால் சென்னைக்குள் கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

காலை 8 மணி முதல் மதியம் 12 வரையும், மாலை 4 முதல் இரவு 8 மணி வரையும் கனரக வாகனங்களை அனுமதிக்கக் கூடாது என்று ஆணையர் அருண் போக்குவரத்து காவல்துறையினருக்கு உத்தரவிட்டார். இந்த உத்தரவை மீறி சென்னைக்குள் வந்த 200க்கும் அதிகமான கனரக லாரிகள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

நேரக் கட்டுப்பாடு காரணமாக சென்னையில் நேற்று குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில் இன்று (ஜூன் 21) குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடன் சென்னை காவல் ஆணையர் அருண் ஆலோசனை மேற்கொண்டார். இதில், சென்னையில் காலை 7.30 மணி முதல் 9 மணி வரை மெட்ரோ குடிநீர் லாரிகள் இயங்க தடை விதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. காலை 5 மணி முதல் 7.30 மணிக்குள் தண்ணீர் சப்ளை செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் சாலைகள் குறித்த பட்டியலை 3 நாள்களுக்குள் தயாரிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பதவி உயர்வுகளில் எஸ்சி, எஸ்டி ஊழியர்களுக்கு இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும்: கூட்டமைப்பு வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 23

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிக்கையாளர் மன்றத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை எஸ்சி, எஸ்டி பணியாளர் கூட்டமைப்பினர் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாட்டின் மாநில அரசு பணிகளில் பணிமூப்பு நிலையை நிர்ணயிக்க இதுவரை பின்பற்றி வந்த 200 பாயிண்ட் ரோஸ்டர் முறையை தடை செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து தமிழ்நாடு மாநில தேர்வாணையம் மூலம் அரசு பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மதிப்பெண் அடிப்படையிலானதிருத்தியசீனியாரிட்டி பட்டியலை மனிதவளத் துறை வெளியிட்டுள்ளது. இந்ததிருத்தியசீனியாரிட்டி பட்டியலால் ஏற்கனவே பதவி உயர்வு பெற்றவர்கள் பலருக்கு பதவி இறக்கம் செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

திருத்திய சீனியாரிட்டி பட்டியலின் அடிப்படையில் எதிர்காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டால், எஸ்சி அரசு ஊழியர்களின் பதவி உயர்வு நிலையானது, நூறு பேருக்கு ஐந்து நபருக்கும் குறைவாகவே இருக்கும்.

அதே போல எஸ்டி அரசு மத்திய அரசு பணிகள் மற்றும் கர்நாடகா, அரியானா போன்று ஆறு மாநிலங்களில் தற்பொது அரசியல் சாசன கூறு 16(4ஏ) யின் படி பதவி உயர்வு பணிகளில் எஸ்சி / எஸ்டியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கச்சட்டமியற்றி நடைமுறையிலும் உள்ளது. அது போல தமிழக அரசின் பதவி உயர்வு பணிகளிலும் எஸ்சி/எஸ்டி அரசு ஊழியர்களுக்கான இடஒதுக்கீட்டை செயல்படுத்த அவசர சட்டமியற்ற வேண்டும்.

பதவி உயர்வுகளில் எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அவசர சட்டமாக 16(4ஏ)யின் படி தமிழகத்தில் அரசு பணிகளில் பதவி உயர்வில் இடஒதுக்கீட்டினை நடைமுறைபடுத்தும் சட்டத்தை இயற்ற கோரிக்கை வைக்கிறோம்.

# சாம்பாரில் பல்லி திருவாரூர் ஜி.ஹெச் உணவகத்துக்கு சீல்



திருவாரூர், ஜூன் 23

திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு தினமும் சிகிச்சைக்காக நூற்றுக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். இங்கு குடவாசல் அடுத்த வடவேரை சேர்ந்த ஜெயராமன் தனது மகள் கவுசல்யாவை பிரசவத்திற்காக சேர்த்துள்ளார். இவர் நேற்று காலை மருத்துவமனை வளாகத்தில் உள்ள கேன்டீனில் இட்லி வாங்கி வந்து கர்ப்பிணி மகளுக்கு கொடுத்தார். கவுசல்யா பார்சலை பிரித்து சாம்பாரை இட்லி மீது ஊற்றியபோது சாம்பாரில் பல்லி கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இது தொடர்பாக தந்தை ஜெயராமன் மற்றும் உறவினர்கள் மருத்துவமனை நிர்வாகத்திற்கு தகவல் அளித்தனர்.

மேலும் தாலுகா போலீசாரும் வந்து விசாரணை நடத்தினர். இதனையடுத்து உணவு பாதுகாப்பு துறையினர் சம்பந்தப்பட்ட உணவகத்தை பூட்டி சீல் வைத்ததுடன் அங்கு இருந்த உணவு மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து டீன் ராஜேந்திரன் கூறுகையில், உணவகத்தில் சம்பவத்தின்போது உணவு அருந்தியவர்களுக்கு இதுவரை எந்தவித தொந்தரவும் இருந்ததாக தகவல் இல்லை.

இருப்பினும் உணவு மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் முடிவு வந்த பின் சம்பந்தப்பட்ட உணவகத்தை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# அதிமுக ஆட்சியில் நடந்த கழிவறை ஊழல் வழக்கு: ஆவணங்கள் பறிமுதல்

நெமிலி, ஜூன் 23

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி பிடிஓ அலுவலகத்தில் கடந்த 2016ம் ஆண்டு அதிமுக ஆட்சியின் போது கழிவறை கட்டுவதில் ஊழல் நடந்துள்ளது.

இது தொடர்பாக அப்போதைய பிடிஓ மீது விஜிலென்ஸ் போலீசாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அதற்கான விசாரணை நடந்து வரும் நிலையில், நேற்று வழக்கு தொடர்பாக விடுபட்ட ஆவணங்களை நெமிலி பிடிஓ அலுவலகத்தில் இருந்து விஜிலென்ஸ் போலீசார் ஆய்வு செய்து கைப்பற்றி சென்றனர்.

திடீரென விஜிலென்ஸ் போலீசார் வந்து ஆவணங்களை கொண்டு சென்ற சம்பவம் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காஷ்மீர்-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் ஓசூர் மேம்பால மைய இணைப்பு அரை அடி விலகியதால் பரபரப்பு: போக்குவரத்துக்கு தடை

ஓசூர், ஜூன் 23

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் பழைய நகராட்சி அலுவலகம் எதிரில் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தில் மைய இணைப்பு பகுதி அரை அடிக்கு விலகியதால் வாகனங்கள் திருப்பி விடப்பட்டன. இதனால், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

காஷ்மீர் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையானது கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வழியாக செல்கிறது. ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்த சாலையை பராமரித்து வருகிறது. இந்த சாலை வழியாக தினமும் கனகரக வாகனங்கள் மற்றும் கார், பஸ்கள் உள்ளிட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் சென்று வருகின்றன. ஓசூர் பஸ் நிலையத்தையொட்டி உள்ள பழைய நகராட்சி அலுவலகம் எதிரில் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கடந்த 15 ஆண்டுக்கு முன்பு உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்பட்டது. இந்த மேம்பலத்தின் வழியாக அதிக பாரங்களை ஏற்றிக்கொண்டு கனரக வாகனங்கள் ஏராளமாக இயக்கப்பட்டு வருகின்றன.



நேற்று மதியம் இந்த மேம்பாலத்தில் இணைப்பு பகுதி விலகி உள்ளதாக பணியாளர்கள் சிலர் தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்குதகவல்அளித்தனர். இதன்பேரில், தேசிய நெடுஞ்சாலைத்துறையின் தலைமை பொறியாளர் பிரசன்னா தலைமையிலான பொறியாளர்கள் வந்து ஆய்வு செய்தனர். அதே நேரத்தில் அந்த வழியாக வாகனங்கள் தொடர்ந்து இயக்கப்பட்டு வந்தது. இதனால், இணைப்பு பகுதி மேலும் விலகும் அபாயம் ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து மேம்பாலம் வழியாக சென்னை பெங்களூரு செல்லும் வாகனங்கள் மாற்று வழியில் திருப்பி விடப்பட்டன. அனைத்து வாகனங்களும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஓசூர் பஸ் நிலையத்திற்கு செல்லும் சர்வீஸ் சாலை வழியாகவும், ரிங் ரோடு வழியாகவும் மாற்றி விடப்பட்டன. இதனால், வாகனங்கள் பஸ் நிலையம் வழியாக தர்கா வரை சென்று மீண்டும் தேசிய நெடுஞ்சாலைக்கு செல்கிறது. 2 கிலோ மீட்டர் தொலைவிற்கு சர்வீஸ் சாலை வழியாக வாகனங்கள் மாற்றி விடப்பட்டதால், நகரின் மையப்பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகளிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தலைமை பொறியாளர் பிரசன்னா கூறுகையில், ''மேம்பாலத்தின் வழியாக அதிகளவில் கன்டெய்னர் லாரிகள் இயக்கப்பட்டு வருகிறது. மேம்பலத்தின் தூணிற்கு மேல் உள்ள பாட்பேரிங் (பானை போன்ற பேரிங் கம்பிகள்) ஒரு பகுதி உடைந்திருக்கலாம். அல்லது விலகி இருக்கலாம். இதனால், மைய இணைப்பு பகுதி சுமார் அரை அடிக்கு விலகி உள்ளது. இதையடுத்து, வாகனங்கள் செல்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து உயரதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐதராபாத்திலிருந்து திட்ட அதிகாரி வந்து ஆய்வு செய்த பின்னர் ஜாக்கி வைத்து சீரமைக்கப்படும். அதன் பிறகு வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படும்'' என்றார்.

# காற்றாலை மின் உற்பத்தி கிடுகிடு உயர்வு



நெல்லை, ஜூன் 23

தமிழகத்தில் அனல் மின் நிலைய மின் உற்பத்திக்கு அடுத்தப்படியாக காற்றாலை மின் உற்பத்தி மற்றும் சோலார் மின் உற்பத்தி அதிக பங்கு வகிக்கிறது. சீசன் நேரங்களில் மின் உற்பத்தி பகிர்மான கழகத்திற்கு காற்றாலை மின் உற்பத்தி கை கொடுக்கிறது. தமிழகம் முழுவதும் 9 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட காற்றாலைகள் உள்ளன. குறிப்பாக நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிக காற்றாலைகள் உள்ளன.

தென்மேற்கு பருவக் காற்று சீசன் தொடங்கியது முதல் காற்றாலையில் மின் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. கடந்த 2 வாரங்களாக காற்றாலைகள் மூலம் கிடைக்கும் மின்சாரம் உச்சம் பெற்று வருகிறது. கடந்த 19ம் தேதி சராசரி காற்றாலை மின் உற்பத்தி 3,083 மெகாவாட்டாக இருந்தது. நேற்று முன்தினம் 4,030 மெகா வாட்டாகவும், நேற்று 4,150 மெகாவாட்டாகவும் உயர்ந்தது.

நெல்லை, குமரி, தென்காசி மாவட்டங்களில் காற்றின் வேகம் அதிகமாக இருந்தது. இதனால் மின் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. காற்றாலை மின் உற்பத்தி தொடர்ந்து அதிகமாக உள்ளதால் தனியார் காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# வாணியம்பாடி அருகே லாரி மீது கார் மோதல்; சென்னை போலீஸ்காரர் பலி: பெண் எஸ்ஐ உட்பட 4 பேர் தப்பினர்

வாணியம்பாடி, ஜூன் 23

கிருஷ்ணகிரி பகுதியை சேர்ந்தவர் சந்திரா(49). இவர் கிருஷ்ணகிரி மாவட்ட குற்றப்பிரிவு ஆவண காப்பக சிறப்பு எஸ்ஐயாக பணியாற்றி வருகிறார். இவரது மகன்கள் நித்திஷ்செல்வன் (22), ஆகாஷ்செல்வன்(17). நேற்று முன்தினம் சென்னையில் உள்ள கல்லூரியில் ஆகாஷ்செல்வனை சேர்ப்பதற்காக காரில் சென்றனர். பின்னர் அங்கிருந்து ஊருக்கு புறப்பட்டனர். அப்போது காரில் சந்திராவின் அண்ணனான சென்னை போலீஸ் அகாடமி அமைச்சுப்பணியாளர் பிரிவு போலீஸ்காரர் சரவணன்(57) என்பவரும் உடன் வந்தார்.



இவர்களது கார் நேற்று திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த நெக்குந்தி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடி அருகே வந்த போது சாலையோரம் நின்றிருந்த கன்டெய்னர் லாரி மீது திடீரென மோதியது. இதில் சரவணன் பலியானார். மற்ற 4 பேரும் லேசான காயத்துடன் தப்பினர்.

# கோவை: தாயின் கண் முன்னே சிறுத்தை கவ்வி சென்ற சிறுமியின் உடல் மீட்பு



கோவை, ஜூன் 23

ோவை மாவட்டம் வால்பாறை அருகே உள்ள பச்சைமலை எஸ்டேட் வடக்கு பிரிவில் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதி அமைந்துள்ளது. இந்த குடியிருப்பில், ஜார்கண்டை சேர்ந்த மனோஜ் முந்தாமோனிகா தேவி தம்பதியினர் தங்களுடைய 2 குழந்தைகளுடன் தங்கியிருந்து தேயிலை தோட்டத்தில் தொழிலாளர்களாகவேலைபார்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று மாலை 6.30 மணியளவில் மோனிகா தேவி வீட்டின் பின்புறம் உள்ள குடிநீர் குழாயில் தண்ணீர் பிடித்து கொண்டிருந்த போது, அவருடன் மூத்த குழந்தையான 6 வயது சிறுமியான ரோஷினி குமாரியும் உடன் இருந்துள்ளார்.

அப்போது குடம் நிறைந்ததும் அதனை தூக்கி கொண்டு மோனிகா தேவி வீட்டிற்கு சென்றார். சிறுமி குடிநீர் குழாய் அருகே நின்றிருந்தது. சிறிது நேரத்தில் சிறுமியின் அலறல் சத்தமும், குடம் கீழே விழும் சத்தமும் கேட்டது. இதனைக்கேட்டு பதறியடித்து மோனிகா தேவி வெளியே ஓடிவந்தார்.

அப்போது தேயிலை தோட்டத்தில் பதுங்கியிருந்த சிறுத்தை ஒன்று 6 வயது சிறுமியை கவ்வி இழுத்து சென்றது. இதனை கண்டு அதிர்ச்சியடைந்த அவர், கதறி அழுது துடித்தார். அவரது சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் மற்றும் குடியிருப்பு பகுதியில் உள்ளவர்கள் ஓடி வந்தனர். ஆனால் சிறுமியை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

சிறிது நேரத்திற்கு பின்னர் சிறுமி அணிந்திருந்த ஆடை மட்டும் ரத்த கறையுடன் தேயிலை தோட்ட பகுதியில் கிடந்தது. ஆனால் சிறுமியின் உடல் கிடைக்கவில்லை. இரவு சுமார் 9.30 மணி வரை தேடியும் சிறுமியின் உடலை கண்டுபிடிக்க முடியவில்லை. தாயின் கண் முன்னே இந்த கொடூரம் நடந்துள்ளது. இந்நிலையில், அந்த சிறுமியின் உடல் இன்று மீட்கப்பட்டு உள்ளது. சிறுமியை கவ்வி சென்ற சிறுத்தை மீண்டும் அந்த பகுதிக்கு வருவதற்கான சாத்தியம் அதிகரித்து உள்ளது. இதனால், அந்த பகுதியில் வசித்து வருபவர்கள் அச்சமடைந்து உள்ளனர்.

# சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பாக அனைத்து துறை ஆலோசனை கூட்டம்

சென்னை, ஜூன் 23

அகமதாபாத் விமான விபத்துக்கு பின்பு, நாடு முழுவதும் விமான சேவைகளில், முழு பாதுகாப்பு ஏற்பாடுகளை, இந்திய விமான போக்குவரத்து துறை அமைச்சகம் செய்து வருகிறது. அதன்படி சென்னை விமான நிலையத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அனைத்து பிரிவினரிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான, ஆலோசனைக் கூட்டம், சென்னை விமான நிலையத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் சென்னை விமான நிலைய உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள், விமான பாதுகாப்பு துறையான பி சி ஏ எஸ் அதிகாரிகள், அனைத்து விமான நிறுவன உயர் அதிகாரிகள் மற்றும் ராணுவ அதிகாரிகள், அதிரடிப் படை அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அந்த ஆய்வுக் கூட்டத்தில், ஓடிஏ வளாகத்தில், மிகப்பெரிய அளவில்,பாதுகாப்புஒத்திகை ஒன்றை நடத்துவது என்றும், அதில் விமான நிலையம் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகள், ஊழியர்கள், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிசிஏஎஸ், சிஐஎஸ் எப் உள்ளிட்ட அதிகாரிகள், வீரர்கள், தீயணைப்புத்துறையினர், மருத்துவ துறையினர், காவல்துறையினர், உள்ளிட்டோர் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அவசர காலங்களில் பாதிப்புகள் அதிகமாக ஏற்படாமல் தடுப்பது, போன்ற பல வகையான ஏற்பாடுகளுடன், ஒத்திகை அணிவகுப்பை, மிகப்பெரிய அளவில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அவசர காலங்களில் விபத்து நேரங்களில், அனைத்து துறையினரும், ஒருங்கிணைந்து துரிதமாக செயல்பட்டு, பாதிப்புகளை வெகுவாக குறைப்பதோடு, பாதிப்புகளே ஏற்படாமல் தடுக்கவும், பயிற்சியாளர்கள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த பாதுகாப்பு அணிவகுப்பு ஒத்திகை, பரங்கிமலை ஓ டி ஏ வில் நடக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தேதி அறிவிக்கப்படவில்லை.

# மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பற்றி எரியும் காட்டுத் தீ

தென்காசி, ஜூன் 23

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் யானை, மான், மிளா, உடும்பு, மரநாய், பன்றி, கரடி உள்ளிட்ட பல்வேறு வகையான வன விலங்குகள் வசித்து வருகின்றன. மேலும் நோய் தீர்க்கும் அரிய வகை மூலிகைகளும், பழமை வாய்ந்த மரங்களும் அதிக அளவில் இருப்பதால், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியானது பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக இருந்து வருகிறது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியான கோட்டைமலை பகுதியில் நேற்று மாலையில் இருந்து காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது. இதனால் அங்குள்ள விலங்குகள், பறவைகள் ஆகியவை காட்டை விட்டு வெளியேறி வருவதாக மலையை ஒட்டிய பகுதிகளில் வாழும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் வேகமாக பற்றி எரியும் காட்டுத் தீயால், மலையில் உள்ள அரிய வகை மூலைகள், மரங்கள் ஆகியவை எரிந்து நாசமாகி வருகின்றன. இதற்கிடையில், வனச்சரகர் ஆறுமுகம் தலைமையிலான வனத்துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் தீயை அணைக்கும் பணி சவாலாக இருப்பதாக கூறப்படுகிறது. இந்த காட்டுத் தீ காரணமாக மலையில் இருந்து சுமார் 15 கி.மீ. தூரத்திற்கு சாம்பல் பரவி வருவது குறிப்பிடத்தக்கது.

# மருதமலை முருகன் கோவிலில் பக்தர்கள் பயன்பாட்டிற்காக லிப்ட் வசதி



கோவை, ஜூன் 23

கோவை மருதமலையில் அடிவாரத்தில் இருந்து மலை மீதுள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு பக்தர்கள் வந்தடைய மலைப் பாதை, படிக்கட்டுப் பாதைகள் உள்ளன. மலை மீது வாகனம் நிறுத்தும் இடத்தில் இருந்து பக்தர்கள் 150 படிக்கட்டுகளை கடந்து, 35 மீட்டர் உயரத்துக்கு மேலே சென்று சுவாமியை தரிசனம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, பக்தர்கள் வசதிக்காக இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.5.20 கோடி மதிப்பில் லிஃப்ட் (மின்தூக்கி) அமைக்கும் பணிகள் கடந்தாண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ராஜகோபுரம் படிக்கட்டை ஒட்டியுள்ள வாகனம் நிறுத்தும் இடத்தில், 2 லிப்ட்கள் அமைக்கும் பணிகள் நடக்கின்றன. இதில் ஒரே சமயத்தில் தலா 20 பேர் செல்லலாம். அங்கிருந்து 12 மீட்டர் உயரத்துக்கு லிஃப்ட் மேலே செல்லும். பின்னர், அங்கிருந்து 40 மீட்டர் தூரம் பக்கவாட்டுப் பகுதியில் பக்தர்கள் நடந்து வந்து, மற்றொரு லிப்ட்டில் ஏறி 8 மீட்டர் தூரம் மேலே சென்று கோயிலுக்கு செல்லலாம்.

இதுகுறித்து இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகள் கூறும்போது, "இக்கோயில் வளாகத்தில் இரு பிரிவுகளாக மேம்பாட்டுப் பணிகள், லிப்ட் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பேஸ் 1 திட்டத்தில் அன்னதானக் கூடம், பொருட்கள் வைப்பறை உள்ளிட்ட கட்டிடங்கள் கட்டும் பணி ரூ.6 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 10 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

மலையின் மீது வாகனம் நிறுத்திமிடத்தி லிருந்து ஆதி மூலஸ்தானம் செல்ல பழைய படிக்கட்டுப் பாதை உள்ளது. இப்படிக்கட்டு பாதைகள் சீராக இல்லாமல் சேதமடைந்து காணப்படுகின்றன. பேஸ்2 திட்டத்தில் இந்த படிக்கட்டுப் பாதைகள் சீரமைத்தல், பக்தர்கள் இளைபாறுவதற்காக 11 இளைப்பாறு மண்டபங்கள் உள்ளிட்டவை கட்டப்பட உள்ளன. இவற்றின் மதிப்பு ரூ.10 கோடி ஆகும். ஒப்பந்த நடைமுறைகள், நிறுவனம் தேர்வு உள்ளிட்ட நிலையில் பேஸ்2 பிரிவு பணிகள் உள்ளன.

அது தவிர, தனியாக ரூ.5.20 கோடி மதிப்பில் லிப்ட் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மலை மீது வாகனம் நிறுத்தும் இடத்தில் இருந்து 12 மீட்டர் உயரத்துக்கு செல்லும் வகையில் 2 லிப்ட்கள் அமைக்கப்பட்டு விட்டன. இரண்டாம் கட்ட லிப்ட் திட்டம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. பாறையை குடைந்து சில பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அதனால் 15 சதவீதம் பணிகள் நிலுவையில் உள்ளன.

விரைவாக இப்பணிகள் முடிக்கப்பட்டு, ஆகஸ்ட் மாதம் லிப்ட் பக்தர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்" என்றனர்.

# சர்வதேச யோகா தினம்: நெல்லை மாநகர போலீசாருக்கு யோகா பயிற்சி



திருநெல்வேலி ஜூன் 23

திருநெல்வேலி மாநகர காவல் துணை கமிஷனர் (மேற்கு) பிரசண்ணகுமார் தலைமையில் திருநெல்வேலி மாநகர ஆயுதப்படை மைதானத்தில் சர்வதேசயோகாதினத்தை முன்னிட்டு இன்று யோகா பயிற்சி நடைபெற்றது. இதில் மாநகர காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

# மனைவி, 2 குழந்தைகளை வெட்டிக்கொன்ற விவசாயி... விருதுநகரில் அதிர்ச்சி சம்பவம்



விருதுநகர் ஜூன் 23

ிருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டைஅருகே உள்ள திருவிருந்தாள்புரம் கிராமத்தை சேர்ந்தவர் சுந்தரவேலு. விவசாயியான இவருக்கு திருமணமாகி பூங்கொடி என்ற மனைவியும், ஜெயதுர்கா(10), ஜெயலெட்சுமி(7) என 2 பெண் குழந்தைகளும் இருந்தனர். இந்த நிலையில், குடும்ப பிரச்சினை காரணமாக, சுந்தரவேலு தனது மனைவி மற்றும் 2 பெண் குழந்தைகளை அரிவாளால் வெட்டிக் கொன்றார். இதன் பின்னர் காவல் நிலையத்திற்கு சென்ற சுந்தரவேலு, தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளை வெட்டிக் கொலை செய்ததாக கூறி சரணடைந்துள்ளார்.

இதைக்கேட்டு போலீசார் அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக அவர்கள் சம்பவ இடத்துக்கு சென்று பார்த்தனர். அப்போது சுந்தரவேலுவின் மனைவி மற்றும் 2 குழந்தைகளும் வீட்டில் பிணமாக கிடந்தனர். இதையடுத்து 3 பேரின் உடல்களையும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்த போலீசார், சுந்தரவேலுவை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அத்துடன் மாவட்ட எஸ்பி கண்ணன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்தி வருகிறார். குடும்பத்தகராறில் 3 பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சமையலின் ஆஸ்கார் விருது வாங்கிய தமிழருக்கு கனிமொழி எம்.பி. பாராட்டு

சென்னை , ஜூன் 23

சிகாகோவில் நடைபெற்ற விழாவில் நியூயார்க்கின் சிறந்த சமையல் கலைஞருக்கான விருதைத் தமிழ்நாட்டை சேர்ந்த செப் விஜயகுமார் வென்றுள்ளார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டை சேர்ந்த செப் விஜயகுமாரை பாராட்டி, திமுக துணை பொதுச் செயலாளரும், மக்களவைக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, தனது எக்ஸ் சமூக வலையதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், நத்தத்தின் புகையூட்டும் சமையலறைகளிலிருந்து ஜேம்ஸ் பியர்ட் மேடையின் புகழ் வெளிச்சத்துக்குக் கொண்டு சென்றிருக்கும் விஜய் குமார், உங்கள் பயணம் தமிழர்களின் வரலாற்றில் ஒரு மைல்கல்.



எளிமையான நமது பாரம்பரிய வேர்களிலிருந்து, காலத்தைக் கடந்து நிற்கும் பெருமிதத்திற்கு நீங்கள் வந்தடைந்துள்ளீர்கள்.

ஒருநாள் உங்களைச் சந்திக்கவும், கடல்கள் கடந்து கொண்டுதாங்கள் கொண்டு சென்றுள்ள உயிர்ப்புமிக்க அந்த உணவைச் சுவைத்திடவும், நான் ஆவலோடு உள்ளேன். என தெரிவித்துள்ளார் .

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

23.6.2025

# மண்டபத்தில் ரயில்வே நடைமேம்பாலம் அமைக்கப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு



மண்டபம், ஜூன் 23

மண்டபத்தில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி, ரயில்வே நடைமேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மண்டபம் பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமப் பகுதியான ஓடைத்தோப்பு, மீனவர் காலனி, ஐ.என்.பி காலனி, தோணித்துறை, தோப்புக்காடு உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த பகுதியில் வசித்து வரும் பொதுமக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், காந்திநகர் பகுதியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் பயின்று வருகின்றனர். இந்நிலையில் மண்டபம் முதல் ராமேஸ்வரம் வரை செல்லும் ரயில்வே தண்டவாளத்தை மாணவர்கள் ஆபத்தான முறையில் கடந்து, இந்த பள்ளிக்கு சென்று வருகின்றனர். ராமேஸ்வரத்திற்கு ரயில் போக்குவரத்து துவங்கப்பட்டதை அடுத்து, அதிகமான ரயில்கள் இந்த மார்க்கத்தில் சென்று வருகின்றன. மேலும் ரயில்வே நிர்வாகம், மண்டபம் ரயில்வே நிலையத்தை விரிவாக்கம் செய்யும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் இப்பகுதியில் பாதுகாப்பு கருதி, சுற்றுச் சுவர் எடுத்து அடைத்து வருகிறது.

இதனால் இந்த பள்ளிக்கு செல்லும் மாணவர்கள், மண்டபம் நகர் பகுதி வழியாக, ராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை வழியாக சென்று மீண்டும் காந்தி நகரில் உள்ள பள்ளிக்கு வர வேண்டும். இதற்காக மாணவர்கள், சுமார் பத்து கிலோ மீட்டர் தொலை தூரத்தை சுற்றி பள்ளிக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகையால், இக்கிராம பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பாதுகாப்பாக சென்று வர, ரயில்வே நடைமேடை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து இப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கூறுகையில், ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள், பாதுகாப்புடன் பள்ளிக்கு சென்று வர நடைமேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது ரயில்வே கேட் அமைத்து வழித்தடத்தை ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆய்வு செய்து மாற்று பாதைகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# எல்ஐசி ஊழியர்கள் ஜூலை 9ல் ஸ்டிரைக்

தென்காசி, ஜூன் 23

தென்காசியில் அகில இந்திய காப்பீட்டுக் கழக ஊழியர் சங்க தலைவர் ரமேஷ் நிருபர்களிடம் நேற்று கூறுகையில், 'பொதுத்துறை நிறுவனமான எல்ஐசியின் பல்வேறு கோரிக்கைகளின் மீது அரசு செவிசாய்க்கவில்லை 50க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்களில் எல்ஐசி போட்டிப் போட்டு சிறப்பான சேவையை வழங்கி வருகிறது. தற்போது நடைபெற்ற விமான விபத்தில் கூட யாரெல்லாம் இறந்ததாக அரசால் அறிவிக்கப்பட்டதோ அவர்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை, எல்ஐசி நிறுவனத்தால் வழங்கப்பட்டது. எல்ஐசி பணியாளர் பற்றாக்குறை சரி செய்யப்பட வேண்டும். இது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை மாதம் 9ம் தேதி நடைபெறும் ஒரு நாள் அகில இந்திய அளவில் வேலை நிறுத்த போராட்டத்தில் எல்ஐசி முழுமையாக கலந்து கொள்ளும்' என்றார்.

# விழுப்புரம் அருகே வாய்க்கால் தரைப்பாலம் உடைந்ததால் போக்குவரத்து துண்டிப்பு



விழுப்புரம், ஜூன் 23

விழுப்புரம் மாவட்டம் அனிச்சம்பாளையம் சாலையில் உள்ள கோலியனூரான் வாய்க்கால் தரைப்பாலம் உடைந்ததால் அப்பகுதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அனிச்சம்பாளையம், எம்.குச்சிபாளையம் உள்ளிட்ட கிராமங்களுக்கு பேருந்து செல்ல முடியாததால் பொதுமக்கள் வேலைக்கு மற்றும் மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல முடியாமல் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

# மனைவியை எரித்துக் கொன்று மாடியில் இருந்து குதித்த முதியவர்



காரியாபட்டி, ஜூன் 23

விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி அருகே அச்சம்பட்டியை சேர்ந்தவர் நாகேந்திரன் (60). மனைவி கஸ்தூரி (52). மாடி வீட்டில் வசித்து வருகின்றனர். மகன், மகள் திருமணமாகி வெளியூரில் வசிக்கின்றனர். தம்பதியினரிடையே அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. நேற்று அதிகாலை மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில், ஆத்திரமடைந்த நாகேந்திரன், கஸ்தூரி மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துள்ளார்.

இதில், தீக்காயம் அடைந்த மனைவி சம்பவ இடத்திலேயே பலியானார். அப்போது நாகேந்திரன் மீதும் தீப்பற்றியது. இதையடுத்து அவர் வீட்டின் மாடியிலிருந்து குதித்தார். இதில் படுகாயமடைந்த அவருக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், குடும்ப பிரச்னை காரணமாக மனைவியை எரித்து, கொன்று விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ளலாம் என நாகேந்திரன் திட்டமிட்டுள்ளார்.எதிர்பாராவிதமாகதீப்பற்றியதால் பதற்றத்தில் வீட்டின் மாடியிலிருந்து குதித்தது தெரிய வந்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (23.6.2025)

- மேஷம்: நேரம் சாதகமாக இருக்கும். தொழிலில் வெற்றி, பணவரவுக்கு வாய்ப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகம்.
- ரிஷபம்: சில தாமதங்கள் இருந்தாலும் முடிவுகள் நல்லவை. நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும்.
- மிதுனம்: புதிய வாய்ப்புகள், நல்ல செய்தி வரக்கூடும். நட்பில் நம்பிக்கை தேவை.
- கடகம்: உணர்ச்சி மேலடக்கம் தேவை. குடும்பம் சார்ந்த விசயங்களில் சிக்கல் ஏற்படலாம்.
- சிம்மம்: முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். எதிர்பாராத சந்திப்பு உண்டு.
- கன்னி: நேர்த்தியான பேச்சு வெற்றி தரும். பணவரத்து சீராக இருக்கும்.
- துலாம்: நல்ல ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும்.
- விருச்சிகம்: சமயத்தில் பொறுமை தேவை. சினிமா/மீடியா துறையினர் IÇIN ஏற்ற நாள்.
- தனுசு: தன்னம்பிக்கை மேலோங்கும். பயணம் சாதகமானது.
- மகரம்: அவசர முடிவுகளை தவிர்க்கவும். பிள்ளைகள் தொடர்பான விஷயத்தில் கவனம் தேவை.
- கும்பம்: தடைபட்ட காரியம் நடக்கும். அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும்.
- மீனம்: மனநிறைவான நாள். பக்தியில் ஈடுபாடு அதிகரிக்கும்.

# சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே மீன்பிடித் திருவிழாவில் ஒருவர் உயிரிழப்பு






சிவகங்கை, ஜூன் 23

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே மீன்பிடித் திருவிழாவில் கலந்து கொண்ட பாலசுப்பிரமணியன் என்பவர் உயிரிழந்துள்ளார். சிங்கம்புணரி அருகே மீன்பிடித் திருவிழா ஒரு பிரபலமானநிகழ்வாகும். இது விவசாயம் செழிக்க நடத்தப்படுகிறது. இதில், மக்கள் கண்மாயில் இறங்கி மீன் பிடிப்பார்கள். இது ஒரு பாரம்பரிய திருவிழா, இதில் ஊர்மக்கள் அனைவரும் பங்கேற்பார்கள். இந்த திருவிழா அப்பகுதி மக்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகும்.

இந்நிலையில், சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே மட்டிக்கரைப்பட்டியில் மீன்பிடித் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த மீன்பிடித் திருவிழாவில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். அதில் சிங்கம்புணரி அருகே சேந்தம்பட்டி கிராமத்தை சேர்ந்த சமையல் கலைஞர் பாலசுப்பிரமணியன் என்பவர் தனது இளைய மகளுடன் மீன்பிடித் திருவிழாவில் பங்கேற்றார். அப்போது கண்மாயில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பாலசுப்பிரமணியன் திடீரென சுயநினைவின்றி கீழே விழுந்தார். இதையடுத்து அக்கம் பக்கம் உள்ளவர்கள் அவரை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ரஜினியின் வழுக்கைக்கு இதுதான் காரணம் ராஜ்பகதூர் பகிர்ந்த சுவாரஸ்ய தகவல்




நடிகர் ரஜினி பஸ் கண்டக்டராக இருந்த காலத்தில் இருந்து இன்று வரை அவருக்கு நெருங்கிய நண்பராக இருப்பவர் ராஜ்பகதூர். இருவரும் ஒன்றாக வேலை செய்தனர். ரஜினி பற்றி ராஜ்பகதூர் அளித்த பேட்டியில் பகிர்ந்த சுவாரஸ்ய தகவல்கள் வருமாறு:

நானும் ரஜினியும் டிரைவர் மற்றும் கண்டக்டராக பணிபுரிந்தோம். எங்கள் நட்பு 53 ஆண்டுகளாக தொடர்கிறது. எவ்வளவு பெரிய நட்சத்திரமாக ரஜினி இருந்தாலும் அப்போது போல்தான் இப்போதும் பேசுகிறார். எங்கள் உடல்கள் மட்டும் வேறு ஆனால் எங்கள் ஆன்மாக்கள் ஒன்றுதான். நாங்கள் அடிக்கடி சினிமா பார்க்க செல்வோம். அப்போது அவரிடம் இருந்த சினிமா ஆர்வத்தை பார்த்து சினிமாவுக்கு முயற்சி செய்ய சொன்னேன். எனக்கு யார் வாய்ப்பு தருவார்கள் என்று கேட்டார். உன் திறமை உனக்கு தெரியாது. உன் கண்களில் ஒரு சக்தி இருக்கிறது என சொன்னேன்.

நடத்துனராக இருந்த காலத்திலேயே ரஜினி மிகவும் ஸ்டைலிஷாக இருந்தார். அவர் ஸ்டைலாக டிக்கெட் வழங்குவார். முக்கியமாக தனது சிகை அலங்காரத்தை ஒரு போதும் கெடுத்துக் கொள்ள மாட்டார். பேருந்தில் எவ்வளவு கூட்டம் இருந்தாலும் டிக்கெட்டுகள் வழங்குவார். தலைமுடியை சீவிக் கொண்டே இருப்பார்.

சிக்னலில் பஸ் நின்றால் இறங்கி ஸ்டைலாக நின்று சிகரெட் பிடிப்பார். தனது தலைமுடியை அதிகமாக சீவினார். அதனால் அனைத்தும் உதிர்ந்தது. இதுதான் அவரது வழுக்கைக்கு காரணம். தலைமுடியை ஸ்டைல் செய்து, செய்து முடியை உதிர்த்து விட்டார்" இவ்வாறு ராஜ்பகதூர் கூறினார்.

# "தக் லைப்" படத்தின் "ஓ மாறா" வீடியோ பாடல் வெளியானது




நடிகர் கமல்ஹாசன் மற்றும் இயக்குனர் மணிரத்தினம் கூட்டணியில் 38 வருடங்கள் இடைவெளிக்கு பிறகு உருவான படம் 'தக் லைப்'. இதில் சிம்பு, அசோக் செல்வன், திரிஷா, அபிராமி, ஐஸ்வர்யா லட்சுமி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி என அனைத்து மொழிகளிலும் இப்படம் கடந்த 5ந் தேதி வெளியானது. கர்நாடகாவில் மட்டும் கமலின் பேச்சுக்கு எதிர்ப்பு கிளம்பியதால் இப்படம் வெளியாகவில்லை. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியான தக் லைப் திரைப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாததால் கலவையான விமர்சனங்களையே பெற்று வருகிறது. இப்படம் உலக அளவில் ரூ.98 கோடி மட்டுமே வசூல் செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், 'தக் லைப்' படத்தில் சிம்புவின் அறிமுக பாடலாக இடம்பெற்ற 'ஓ மாறா' பாடலின் வீடியோவை யூடியூபில் படக்குழு வெளியிட்டுள்ளது. இப்பாடலை பால் டப்பா எழுதி பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேசிங்கு ராஜா 2 படத்தின் டீசர் வெளியானது!



'பசங்க' படத்தின் மூலம் அறிமுகமான விமல், எழில் இயக்கத்தில் கடந்த 2013ம் ஆண்டு 'தேசிங்குராஜா' என்ற படத்தில் நடித்திருந்தார். நல்ல வரவேற்பைப் பெற்ற இந்தப் படத்தின் 2ம் பாகம் தற்போது உருவாகி வருகிறது.

'தேசிங்குராஜா2' முதல் பாகத்தில் இருந்து வித்தியாசமான கதைக்களத்திலும் முதல் பாகத்தைபோல் காமெடி கலந்த கதைக்களத்திலும் தயாராகி உள்ளது. இந்த படத்தில் விமல் தவிர குக் வித் கோமாளி புகழ், ரவி மரியா, ஹர்ஷிதா போன்றோர் நடித்துள்ளனர்.

இன்பினிட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இப்படத்தின் வருகிற ஜூலை 11ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் டிசர் வெளியாகி உள்ளது.

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நடிகை வித்யா பாலன் சாமி தரிசனம்

2005ம் ஆண்டு வெளியான 'பிரினீதா' படத்தின் மூலம் அறிமுகமானவர் வித்யா பாலன். 'பா', 'கஹானி' உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்திருந்தாலும் மறைந்த நடிகை சில்க் சுமிதாவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட 'தி டர்ட்டி பிக்சர்' படத்தின் மூலம் பிரபலமடைந்தார். இப்படத்துக்குப் பிறகு நாயகியை மையமாகக் கொண்ட திரைப்படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். தமிழில் அஜித்குமாரின் நேர்கொண்ட பார்வை படத்தில் நடித்திருந்தார். இவர் கடைசியாக 'பூல் பூலைய்யா 3' படத்தில் நடித்திருந்தார். அனீஸ் பஸ்மி இயக்கிய இப்படத்தில் கார்த்தி ஆர்யன், திரிப்தி டிம்ரி, வித்யா பாலன், மாதுரி தீட்சித் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இந்நிலையில், நடிகை வித்யாபாலன் இன்று திருப்பதியில் உள்ள ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். கோவிலுக்கு வந்த அவரை, அதிகாரிகள் வரவேற்று சாமி தரிசன ஏற்பாடுகளை செய்து வைத்தனர். அவருக்கு லட்டு, தீர்த்தப்பிரசாதம், சாமி படத்தை அதிகாரிகள் வழங்கினர். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் பரவி வைரலாகி வருகின்றன.

# ஐ.சி.சி. விதிமுறையை மீறிய சுப்மன் கில்.. தண்டனை கிடைக்குமா..?



இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 'ஆண்டர்சன் தெண்டுல்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இந்தியா இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதல் இன்னிங்சை விளையாடிய இந்திய அணி 113 ஓவர்களில் 471 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கேப்டன் சுப்மன் கில் 147 ரன்களும், ரிஷப் பண்ட் 134 ரன்களும், ஜெய்ஸ்வால் 101 ரன்களும் அடித்தனர். இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜோஷ் டங் தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதனையடுத்து இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கி விளையாடி வருகிறது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் கேப்டனான சுப்மன் கில் கருப்பு நிற சாக்ஸ் அணிந்து விளையாடினார். ஐ.சி.சி. விதிப்படி, டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் வீரர்கள் வெள்ளை, கிரீம் அல்லது வெளிர் சாம்பல் ஆகிய நிறங்களில் மட்டுமே காலுறைகளை அணிந்திருக்க வேண்டும். தற்போது அந்த விதிமுறையை சுப்மன் கில் மிறீயுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் அவருக்கு ஐ.சி.சி. தண்டனை விதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

# டி.என்.பி.எல். 2025: நெல்லை அணியை வீழ்த்திய லைகா கோவை கிங்ஸ்



டி.என்.பி.எல். தொடரில் நெல்லையில் இன்று நடைபெற்ற 18வது லீக் ஆட்டத்தில் நெல்லை ராயல் கிங்ஸ் லைகா கோவை கிங்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற நெல்லை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய கோவை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜிதேந்திர குமார் 9 ரன்களிலும், அவரை தொடர்ந்து சச்சின் 10 ரன்களிலும், ஆண்ட்ரே சித்தார்த் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். இந்த இக்கட்டான சூழலில் இருந்து அணியை தொடக்க ஆட்டக்காரர் ஆனசுரேஷ் லோகேஷ்வர் மீட்டெடுத்தார். தனி ஆளாக போராடிய அவருக்கு சிறிது நேரம் ஒத்துழைப்பு கொடுத்த ஷாருக்கான் 30 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த குரு டக் அவுட்டிலும், மாதவ் பிரசாத் ஒரு ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இருப்பினும் சுரேஷ் லோகேஷ்வர் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 90 ரன்கள் அடித்து அணியின் ஸ்கோர் சவாலான நிலையை எட்ட உதவினார். இதனைத்தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் கோவை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 165 ரன்கள் எடுத்தது. நெல்லை தரப்பில் சோனு யாதவ் மற்றும் சச்சின் ரதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதனையடுத்து 166 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் நெல்லை அணியின் சார்பில் சந்தோஷ் குமார் மற்றும் கேப்டன் அருண் கார்த்திக் ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர். இந்த ஜோடியில் சந்தோஷ் குமார் 7 ரன்களில் வெளியேற, அடுத்து களமிறங்கிய ஹரிஷ் 4 ரன்னும், அருண் கார்த்திக் 4 ரன்னும், ஆதிஷ் 1 ரன்னும், ரிதிக் ஈஸ்வரன் 6 ரன்னும், அஜிதேஷ் 8 ரன்னும் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். மறுமுனையில் ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடி வந்த சோனு யாதவ் 23 ரன்களில் கேட்ச் ஆனார். அடுத்து களமிறங்கிய சச்சின்ரதி 1 ரன்னும், ஓரளவு ரன் சேர்த்த முகமது அட்னென்கான் 26 ரன்களும், செரியன் 1 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் நெல்லை அணி 17.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 98 ரன்கள் மட்டுமே எடுத்தது. கோவை அணியின் சார்பில் அதிகபட்சமாக திவாகர் 3 விக்கெட்டுகளும், மணிமாறன் சித்தார்த், புவனேஸ்வரன் மற்றும் கபிலன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதன்மூலம் நெல்லை ராயல் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 67 ரன்கள் வித்தியாசத்தில் லைகா கோவை கிங்ஸ் அணி வெற்றிபெற்றது.

# கிளப் உலகக் கோப்பை கால்பந்து: பேயர்ன் முனிச் அடுத்த சுற்றுக்கு தகுதி

கிளப் அணிகளுக்கான 21வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்2 இடத்தை பிடிக்கும் அணிகள் 'நாக்அவுட்' சுற்றுக்கு முன்னேறும். 4 லீக் ஆட்டங்கள் நடந்தன. இதில் 'சி' பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் பேயர்ன் முனிச் (ஜெர்மனி) அணி 21 என்ற கோல் கணக்கில் போகா ஜூனியர்சை (அர்ஜென்டினா) வீழ்த்தி தொடர்ந்து 2வது வெற்றியை பெற்றதுடன் 'நாக்அவுட்' சுற்றுக்கும் முன்னேறியது.

பேயர்ன் முனிச் அணியில் ஹாரி கேன் (18வது நிமிடம்), மைக்கேல் ஒலிசியும் (84வது நிமிடம்), போகா ஜூனியர்ஸ் தரப்பில் மிகுல் மிரென்டியலும் (66வது நிமிடம்) கோல் அடித்தனர். இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் பென்பிகா (போர்ச்சுகல்) அணி 60 என்ற கோல் கணக்கில் ஆக்லாந்து சிட்டியை (நியூசிலாந்து) பந்தாடியது. பென்பிகா அணியில் ஏஞ்சல் டி மரியா, லியான்ட்ரோ பார்ரியோ தலா 2 கோல் போட்டனர்.

'டி' பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் பிளமென்கோ (பிரேசில்) 31 என்ற கோல் கணக்கில் செல்சி (இங்கிலாந்து) அணிக்கு அதிர்ச்சி அளித்து 2வது வெற்றியை பதிவு செய்து அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் எஸ்பெரன்ஸ் டி துனிஸ் அணி (துனிசியா) 10 என்ற கோல் கணக்கில் லாஸ் எஞ்சல்ஸ் எப்.சி.யை (அமெரிக்கா) தோற்கடித்தது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.